MCOP. 39/2023

நாள்.. 03.10.2024

ம.சா. 1 – ராணி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு எதிர்மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்....

2–ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. முதல் தகவல் அறிக்கையில் உள்ள விவரங்களின் அடிப்படையில் முதன்மை விசாரணை சாட்சியம் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் சொல்லியுள்ளதுபோல் விபத்து நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்தில் இறந்தவர் என் கணவர். விபத்து சமயத்தில் என் கணவர் தலைக்கவசம் அணியவில்லை என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. விபத்து சமயத்தில் என் கணவருக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் இருந்ததா, இல்லையா என்று எனக்கு தெரியாது. அவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததால்தான் அதை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் இருந்ததா, இல்லையா என்று எனக்கு தெரியாது. செல்வியும், சுமதியும் திருமணமாகி அவர்களுடைய கணவர் வீட்டில் வசித்து வருகிறார்கள் என்று சொன்னால் என் கணவர் இறந்தபோது மூத்தமகளுக்கு மட்டும் திருமணமாகியிருந்தது, என் கணவர் இறந்த பிறகு இளைய மகளுக்கு திருமணம் நடந்தது. என் மகள்கள் இருவரும் என் கணவரின் வருமானத்தை சார்ந்து வாழ்ந்துவரவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் விபத்து சமயத்தில் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்திற்கான ஆர்சி புத்தகம் மற்றும் ஓட்டுநர் உரிமம் ஆகியவை மோட்டார் வாகன ஆய்வின்போது ஆஜர்படுத்தப்படவில்லை என மோட்டர் வாகன ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். என் கணவரின் தொழில் மற்றும் வருமானம் குறித்து நான் ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். 12.04.1969 என்று என் கணவருடைய பிறந்ததேதி நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.13 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். என் கணவரின் வருமானத்தை மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. என் கணவரின் அதிவேகமும், கவனக்குறைவும்தான் இந்த விபத்திற்கு காரணம்

என்றும், எனவே 2–ஆம் எதிர்மனுதாரர் நிறுவனம் மனுதாரர்களுக்கு இழப்பீடு அளிக்க கடமைபட்டது அல்ல என்று சொன்னால் சரியல்ல.  பல்வேறு இனங்களில் கோரியுள்ள இழப்பீடு மிகஅதிகம் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**